# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,285—1965 ජනවාරි 6 වැනි බදාදා—1965.1.6

14,285 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு சனவரி மாதம் 6 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. எப். சீ/4/3. **மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவுடன் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட சட்டத்தினால் கொண்டு (உணவு) உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி அம்பாரை மாவட்டம் ராஜகல்கொட கமகே கோசக்க ஒல்கொட் குணசேகர ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 முதல் 5 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ள விலைகளை முறையே அப்பந்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விவரணத்தையும் தரத்தையும் உடைய மாட்டிறைச்சியும் ஆட்டிறைச்சியும் ஒரு இருத்தல் அவ்வட்டவணையில் அவ்வவற்றுக்கியைய 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்குமேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(2) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) "மாட்டிறைச்சி" யென்பது மாட்டினதும் எருமையினதும் இறைச்சி எனப் பொருள்படும். ஆனால் எல்லாவித கழிவுப் பொருள்கள் தவிர்ந்ததாதல் வேண்டும் எனவும், எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குடல், குளம்புகள், கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருள்களும் தவிர) விற்கப்படும்பொழுது "உயிரற்ற நிறை" யில் விற்பனையாகக் கருதப்படுதல் வேண்டுமெனவுங் கட்டளையிடுகிறேன்.

(ஆ) "ஆட்டிறைச்சி" யென்பது ஆட்டினதும், செம்மறி ஆட்டினதும் இறைச்சி எனப் பொருள்படும். ஆனால் எல்லாவித கழிவுப் பொருள்கள் தவிர்ந்ததாதல் வேண்டும் எனவும், எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குடல், குளம்புகள், கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருள்களும் தவிர) விற்கப்படும்பொழுது "உயிரற்ற நிறை" யில் விற்பனையாகக் கருதப்படுதல் வேண்டுமெனவுங் கட்டளையிடுகிறேன்.

(3) மாட்டிறைச்சியும், ஆட்டிறைச்சியும் எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகிறேன்.

(4) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரமும், தரமுங் கொண்ட மாட்டிறைச்சியையும் ஆட்டிறைச்சியையும் தம் வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில், அவ்விபரத்தையும், தரத்தையுங் கொண்ட மாட்டிறைச்சிக்கும் ஆட்டிறைச்சிக்கும் இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(5) மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டுமென்றும், இக்கடைகளிற் குறிப்பிட்ட விபரமும் தரமுங் கொண்ட மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சியின்றி வேறெந்த வகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவுங் கட்டளையிடுகிறேன்.

(6) அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமுங் கொண்ட மாட்டிறைச்சியை அல்லது ஆட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி விற்கப்படும் அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையுங் கொண்ட மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி மட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்றைப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றுங் கட்டளையிடுகிறேன்.

(7) ஒரு விற்பனையில் மாட்டிறைச்சியுடன் அல்லது ஆட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி கழிவுகளிலிருந்து வேறாக நிறுத்து விற்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(8) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி விற்கும்பொழுது தன்னுடைய நிறுக்குந் தராசையோ தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின், ஆட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவுங் கட்டளையிடுகிறேன்.

(9) இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சியை அல்லது ஆட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சியை அல்லது ஆட்டிறைச்சியை வாங்குபவர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்றுங் கட்டளையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சியின் நிறை ;

(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் அல்லது ஆட்டிறைச்சியின் விசித்திரம் ;

(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சிக்கு கொடுக்கப்பட்ட விலை.

(10) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாதெனக் கட்டளையிடுகிறேன்.

(11) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 முதல் 5 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் அடக்கியதாதல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(12) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது நிறுத்தலளவை முறையின் பிரமாண அவோர்டுபோஸ் இருத்தலாகக் கருதப்பட வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு மார்கழி மாதம் 30 ம் திகதி மு. ப. 10 மணிக்கு உகனை கச்சேரியில் ஒப்பமிடப்பட்டது.

ஆர். ஜீ. ஜீ. ஓ. குணசேகர,
உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

## அட்டவணை

### ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சியின் கூடிய விலைகள்

| 1 ம் பந்தி<br>பகுதி | 2 ம் பந்தி<br>எலும்பில்லாத மாட்டிறைச்சி 1 இருத்தலின் கூடிய விலை<br>ரூ. ச. | 3 ம் பந்தி<br>எலும்புடன் மாட்டிறைச்சி 1 இருத்தலின் கூடிய விலை<br>ரூ. ச. | 4 ம் பந்தி<br>எலும்பில்லாத ஆட்டிறைச்சி 1 இருத்தலின் கூடிய விலை<br>ரூ. ச. | 5 ம் பந்தி<br>எலும்புடன் ஆட்டிறைச்சி 1 இருத்தலின் கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. அம்பாரை பட்டினமும் வெவகம்பத்து காரியாதிகாரியின் பகுதியும் .. | 0 80 .. | 0 60 .. | 2 50 .. | 2 0 |
| 2. சம்மாந்துறை பட்டினமும் சம்மாந்துறை காரியாதிகாரியின் பகுதியும் அம்பாரை பட்டினம் தவிர .. .. .. | 0 90 .. | 0 70 .. | 2 50 .. | 2 0 |
| 3. கரவாகு பற்றும் நிந்தாவூர் பற்று காரியாதிகாரியின் பகுதி .. .. | 0 90 .. | 0 70 .. | 2 50 .. | 2 0 |
| 4. அக்கரைப்பற்று காரியாதிகாரியின் பகுதி .. | 0 85 .. | 0 70 .. | 2 25 .. | 2 0 |
| 5. பாணம பற்று காரியாதிகாரியின் பகுதி .. | 0 80 .. | 0 60 .. | 2 25 .. | 2 0 |

குறிப்பு.—இந்த விலைகள் விற்கப்படக்கூடிய குறிப்பிட்ட விலைகளல்ல ; ஆனால் அவற்றுக்குமேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலைகளாகும்.

I—420.

இலங்கை, வாலைமுச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.